# இலங்கையில் சித்ரவதை - 'பல நேரங்களில் நான் மயக்கம் போட்டு விழுந்திருக்கிறேன்'

இலங்கை தலைநகர் கொழும்பில் பொலிஸ் தடுப்புக்காவலில் வைத்து தான் சித்ரவதை செய்யப்பட்ட கொடூரமான நாட்கள் தேவனுக்கு (நிஜப் பெயர் அல்ல) நினைவுக்கு வந்துகொண்டே இருக்கும்.

அந்த நாட்கள் நினைவுக்கு வரும் நேரத்தில் எல்லாம் அவர் தனக்கு நடந்த கொடூரத்தை எண்ணி வருந்துவார். தனக்கு அதெல்லாம் நடந்ததா என்று நம்புவதற்கே அவருக்கு கஷ்டமாக இருக்கும்.

"என் கண்ணைக் கட்டிப்போட்டுவிட்டு கைகளையும் முதுகுக்குப் பின்னால் சேர்த்துக் கட்டிப்போட்டுவிட்டனர். சில நேரம் எங்களது தலையைப் பிடித்து சுவற்றில் இடிப்பார்கள். நெஞ்சில் காலால் மிதிப்பார்கள். பல நேரங்களில் நான் பாதி மயக்கத்தில் இருப்பேன். முழுதாகவே மயங்கி விழுந்துவிடுவேன். மயக்கம் தெளிந்தவுடன் மறுபடியும் அடிப்பார்கள். "விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவன் என்பதை ஒப்புக்கொண்டு இந்த ஆவணத்தில் கையெழுத்துபோடு" என்று அவர்கள் சொல்வார்கள்.

2008ஆம் ஆண்டு பிற்பகுதி, தேவன் வவுனியா அருகே ஒரு கடையில் வேலைபார்த்து வந்த நேரம் அது.

அந்த வருடம் நவம்பர் 29ஆம் தேதி, அவர் தனது நண்பருடன் கொழும்புக்குச் சென்றிருந்தார். உள்நாட்டு யுத்தம் உக்கிரமாக இருந்த அந்நேரத்தில் அவர்கள் இருவரும் வெள்ளை வேனில் வந்தவர்களால் கடத்தப்பட்டிருந்தனர்.

அந்த ஆட்கள் தேவன் மற்றும் அவர் நண்பரின் கண்களை கட்டி தடுப்புக் காவல் மையம் ஒன்றில் வைத்தனர். மூன்று நாட்கள் சித்ரவதைகளை அனுபவிக்க நேர்ந்த பிறகுதான் தாம் ஒரு காவல் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருக்கிறோம் என்பதே இவர்களுக்குத் தெரிந்தது.

"மூன்று நாட்கள் எங்களுக்கு என்ன நடந்ததென்றே தெரியாது. அடித்துக்கொண்டே இருந்தார்கள். கேள்வி எதுவும் கேட்கவில்லை. வெறும் அடியும் சித்ரவதையும் தான். ஒரே இடத்தில் ஆனால் வெவ்வேறு அறைகளில் எங்களை அடைத்து வைத்தனர். சில நேரம் என் நண்பனுக்கு அடி விழ அவர் அலறுவது எனக்கு கேட்கும். அதேபோல நான் அழுவது அவருக்கு கேட்கும்." என தேவன் அம்னெஸ்டி இண்டர்நேஷனலிடம் கூறியிருந்தார்.

**தொடர்கதையாகும் துஷ்பிரயோகங்கள்**

விடுதலைப் புலி இயக்கத்தில் இருக்கிறார்கள் என்று தாம் சந்தேகிக்கும் எவரையும் பாதுகாப்பு படையினர் நடத்திய விதத்தை எடுத்துக்காட்டுவதாக தேவனுக்கு நேர்ந்த துஷ்பிரயோகங்கள் அமைந்துள்ளன. இலங்கையில் தமிழர்களுக்கென தனி நாடு கோரி ஆயுதமேந்திப் போராடிய ஓர் அமைப்பு அது.

இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் 26 வருட காலமாக நடந்துவந்த யுத்தம் 2009ல் முடிவுக்கு வந்திருந்தது. ஆனால் அந்த காலகட்டத்தில் வேரூன்றிய துஷ்பிரயோகங்கள் இன்றளவும் நீடிக்கின்றன.

ஊடகவியலாளர்கள், சட்டத்தரணிகள், மக்கள் மட்டத்தில் இருந்து செயலாற்றும் ஆர்வலர்கள் உட்பட அரசாங்கத்தை விமர்சிக்கத் துணிந்த எவரையும் தனது எதேச்சதிகார பாதுகாப்பு சட்டங்களைப் பயன்படுத்தி அரசாங்கம் பலவந்தமாக கொண்டுசெல்லவும், வெளியுலகத் தொடர்பு இல்லாமல் வருடக் கணக்கில் தடுத்துவைக்கவும் முடியும்.

1980களிலிருந்து நீடித்துவருகின்ற பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பது தனது விமர்சகர்களை வாய்மூடச் செய்ய இலங்கை அரசாங்கம் பயன்படுத்திகொள்ளும் முக்கிய சட்ட வழிமுறையாக இருந்துவருகிறது. அச்சட்டத்தின் கீழ் மக்கள் குற்றச்சாட்டோ வழக்கோ இன்றி 18 மாதங்கள் வரையில் கைது உத்தரவின் கீழ் தடுத்துவைக்கப்பட முடியும். வழக்கு நிலுவையில் உள்ளது எனக்கூறி எவ்வளவு காலம் வேண்டுமானாலும் ஆட்கள் தடுத்துவைக்கப்பட முடியும். முடிவு தெரியாத ஒரு ஆபத்தான சூழ்நிலையில் அடைத்துவைக்கப்பட்டு, வழக்குரைஞரைப் பார்ப்பதற்கும் அனுமதியில்லாமல், அக்கைதிகள் வைக்கப்படுவது அவர்கள் சித்ரவதை செய்யப்படுவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துகிறது. இலங்கையில் சித்ரவதை என்பது தடைசெய்யப்பட்டிருந்தாலும் அது நடப்பதற்கு இந்தச் சூழ்நிலை இடம் ஏற்படுத்தி விடுகிறது.

அதிகாரிகள் சில நேரங்களில் சட்ட விதிமுறைகள் எதனையுமே பின்பற்றாமல் விட்டுவிடுகின்றனர். இனந்தெரியாத ஆட்களைக்கொண்டு விமர்சகர்களை எப்படி வேண்டுமானாலும் துன்புறுத்துவதிலும் தாக்குவதிலும் அவர்கள் ஈடுபடுகின்றனர். அடையாளம் தெரியாத ஆட்களினால் வெள்ளை வேனில் ஆட்கள் குண்டுக் கட்டாக கொண்டுசெல்லப்பட்டு பின்னர் தூக்கிவீசப்படுவதும் அல்லது அவர்களின் கதி என்னானது என்று தெரியவராமலே போவதும் அதிர்ச்சியளிக்கும் அளவுக்கு அதிகமாக நடந்துவருகிறது.

இவ்வாறாக கொண்டுசெல்லப்பட்டவர்களில் பெரும்பான்மையானோர் மாதக் கணக்கில் வெளித்தெரியாத இடங்களில் தடுத்துவைக்கப்பட்டு, விடுதலைப் புலி

அமைப்பைச் சேர்ந்தவர் என ஒப்புக்கொள்ளச் சொல்லி பாதுகாப்பு படைகளால் வற்புறுத்தப்பட்டுள்ளனர்.

2011ல் விடுதலை செய்யப்படுவதற்கு முன்பாக தடுப்புக் காவலில் இருந்த காலம் தேவன் மிக மோசமாக நடத்தப்பட்டிருந்தார். "என் கையில் ஒரு பேனாவை திணித்துவிட்டு, தாள் ஒன்றைக் காட்டி கையெழுத்துப் போடச்சொல்லி வற்புறுத்தினார்கள். ஆனாலும் நான் மறுத்துவிட்டேன். அதிலிருந்து எனக்கு அடி அதிகமாகிவிட்டது. ஒரு தடவை என் மண்டை உடைந்து தலையிலிருந்து ரத்தம் கொட்டும் அளவுக்கு வேகமாக அடித்திருந்தனர். அதன் தழும்பு இன்னும் எனக்கு இருக்கிறது" என தேவன் தெரிவித்துள்ளார்.

**சிறையில் இருந்த காலம்**

2008 டிசம்பர் 1ஆம் தேதி, பல நாள் சித்ரவதைக்குப் பின்னர், எழுந்து நடக்கக்கூட முடியாத நிலையில் தேவன் மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டிருந்தார். காயங்களுக்கு மருத்துவர்கள் சிகிச்சை அளித்திருந்தனர்.

மருத்துவமனையிலும்கூட படுக்கையுடன் சேர்த்து தேவனின் கைகளும் கால்களும் கட்டப்பட்டிருந்தது.

"கழிப்பறை செல்ல வேண்டும் என்கிறபோது மட்டும்தான் கைவிலங்கை அவிழ்த்துவிடுவார்கள். இரண்டு பொலிஸ்காரர்கள் உடன்வருவார்கள். கழிப்பறைக் கதவை திறந்துவைத்துக்கொண்டேதான் நான் போகவேண்டும்.

கைதுசெய்து இரண்டு வாரங்கள் கழித்து கொழும்பிலுள்ள குற்றப் பிரிவு பொலிஸாரிடம் தேவன் கொண்டுசெல்லப்பட்டிருந்தார். காவல்துறையில் புலனாய்வு விசாரணைகளுக்கான ஒரு பிரிவு அது.

நான்கு மாதங்கள் கழித்து, கொழும்பின் முக்கிய சிறைச்சாலை ஒன்றுக்கு அவர் மாற்றப்பட்டிருந்தார்.

தேவன் இந்த குற்றம்தான் செய்தார் என்று அவர் மீது இதுவரை உத்தியோகபூர்வமாக குற்றம்சாட்டப்பட்டிருக்கவில்லை. தன்னை எதற்காக தடுத்துவைக்கிறார்கள், எதற்காக மோசமாக நடத்துகிறார்கள் என்பதே அவருக்கு தெரியாது

அதிகம் பாதுகாப்பு போடப்பட்ட கொழும்பிலுள்ள வெலிக்கடை சிறையில் 14 நாட்கள் தேவன் தடுத்துவைக்கப்பட்டார். வேறு 70 கைதிகளுடன் சேர்த்து

சங்கிலியால் கட்டப்பட்டு தேவன் நீதிபதி ஒருவர் முன்னால் ஆஜர்செய்யப்பட்டிருந்தார்.

தடுப்புக்காவலை உத்தியோகபூர்வமாக நீட்டிப்பதற்கான ஒரு விசாரணை அது, மஜிஸ்திரேட் ஒருவர் வெறுமனே ஆவணத்தில் கையொப்பமிட்டு முத்திரை குத்துவார். தேவனோ மற்ற கைதிகளோ பேச விரும்பினால் கூட அவர்கள் சொல்வதைக் கேட்க வேண்டும் என்ற கடப்பாடு இந்த மஜிஸ்திரேட்டுகளுக்கு இல்லை.

விடுதலைப் புலி உறுப்பினர்கள் என்று தாம் சந்தேகிக்கும் கைதிகளை மற்ற கைதிகளைக் கொண்டு தாக்கச் சொல்லும் வழக்கம் சிறைக் காவலர்களுக்கு உண்டு. எனவே தேவனுக்கு சிறைக்குள் மிகவும கஷ்டமாக இருந்தது. எல்லோர் முன்னிலையிலும் நிர்வாணமாக்கி உட்காரவைக்கப்பட்டு அவமானப்படுத்தப்படுவது போன்ற துன்புறுத்தல்களை தேவன் சந்தித்திருந்தார். வேறு சில பாலியல் ரீதியான துன்புறுத்தல்களை மற்ற சில கைதிகள் எதிர்கொண்டிருந்தனர்.

“இலங்கையில் நீதிக் கட்டமைப்பு எவ்வளவு மோசமாக செயல்படுகிறது என்பதற்கு தேவனுக்கு நேர்ந்தது ஒரு தெளிவான உதாரணம்” என அம்னெஸ்டி இண்டர்நேஷனல் அமைப்பின் ஆசிய பசிபிக் வட்டகைக்கான துணை இயக்குநர் பாலி டிரஸ்காட் கூறுகிறார்.

“தேவனுக்கு எதிராக குற்றச்சாட்டு எதுவும் முன்வைக்கப்படவில்லை, அவர் திரும்பத் திரும்ப சித்ரவதைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தார், சிறையில் ஓரிரு நாள் இருப்போமா, ஐந்தாறு மாதங்கள் இருப்போமா, முப்பது ஆண்டுகள் இருப்போமா என்று தெரியாத ஒரு சூழ்நிலையில் அவர் வைக்கப்பட்டிருந்தார். இலங்கையின் நீதிக் கட்டமைப்பில் இருக்ககூடிய பிரச்சினைகள் என்னென்ன என்று இது தெளிவாக எடுத்துச் சொல்கிறது.”

### பணம் கொடுத்து விடுதலை

தனக்கு என்ன ஆகுமோ என்று தேவன் சிறையில் குழம்பிப்போயிருந்த நேரம் அவரது குடும்பத்தார் பணம் சேர்த்துக்கொண்டிருந்தனர். சட்டத்தரணி ஒருவரை நியமித்து, பலருக்கும் லஞ்சம் கொடுத்து, தேவனை அவர்கள் வெளியில் எடுத்தனர்.

லஞ்சம் கொடுத்த காரணத்தில்தான் தேவன் விடுதலை செய்யப்பட்டிருந்தார் என அவர்கள் கூறுகின்றனர்.

நாட்டை விட்டு வெளியே வந்துவிட்ட நிலையில் தற்போது தேவன் பாதுகாப்பாக உணர்கிறார் என்றாலும், தான் அனுபவித்த கொடுமைகளுக்கு ஒரு காலத்தில் நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை அவருக்கு இல்லை.

“என் குடும்பத்தார் பணம் கொடுத்தார்கள் என்பதால்தான், என்னால் சிறையில் இருந்து வெளியே வர முடிந்தது. என் மீது முறைப்படி எவ்விதமான குற்றச்சாட்டும் சுமத்தப்படவில்லை. நான் எதிர்கொண்ட துஷ்பிரயோகங்களை விசாரிப்பதற்கு எவ்வித முயற்சியுமே செய்யப்படவில்லை. இலங்கையின் நீதிக் கட்டமைப்பில் இருந்து எங்களுக்கு எவ்வித நியாயமும் கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு கொஞ்சமும் இல்லை.” என்று தேவன் கூறுகிறார்.

**கூடுதல் பின்னணி விவரங்கள்**

2013 மே 1ஆம் தேதி வெளியிடப்பட்ட “இலங்கையில் மனித உரிமை எதுவும் இல்லை” என்ற பிரசுரம்
http://www.amnesty.org/en/news/there-are-no-human-rights-sri-lanka-2013-05-01